# க.பொ.த(சா/த)

# கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள்

# புவியியல்

# (2016 – 2019)

# பகுதி II


தொகுப்பு :- திரு.நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

# பகுதி I

## இடவிளக்கப்படப் பயிற்சிகள்

**2016**

**1.** (அ) 1:50 000 அளவுதிட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தினைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் 8) பயன்படுத்துக.

இல. (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) இல. ① இனால் காட்டப்படுவது என்ன?
(பாதுகாக்கப்பட்ட காட்டு எல்லை / பாறை / கற்குழி) (01 புள்ளி)

(ii) இல. ② இனால் காட்டப்படுவது என்ன?
(காடு / பற்றைக் காடு / சேனை) (01 புள்ளி)

(iii) இல. ③ இனால் காட்டப்படுவது என்ன?
(பௌத்த கோயில் / வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடம் / வாடி வீடு) (01 புள்ளி)

(iv) இல. ④ இனால் குறித்துக் காட்டப்படும் நிர்வாக எல்லை யாது?
(மாவட்ட எல்லை / மாகாண எல்லை / பிரதேச செயலகப்பிரிவு எல்லை) (01 புள்ளி)

(v) **A** என்ற எழுத்தினால் காட்டப்படும் சதுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியில், குறியீடுகளினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள, மக்களுக்குப் பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றினைப் பெயரிடுக. (01 புள்ளி)


(vi) படப் பகுதி பற்றிய மூன்று கூற்றுக்கள் (a),(b),(c) ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து, சரியாயின் 'ச' எனவும் பிழையாயின் 'பி' எனவும் விடைத்தாளில் அதற்கெனத் தரப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.

(a) படப் பகுதியில் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர் என்பதற்கான சான்று உள்ளது. (01 புள்ளி)

(b) படப் பகுதியில் பிரதானமாக மழைநீரின் உதவியுடனேயே நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. (01 புள்ளி)


(c) படப் பகுதியானது, இலங்கையின் வரண்ட வலயத் தாழ்நிலத்துக்குரியது. (01 புள்ளி)

(vii) அருகிலுள்ள குறுக்குப் பக்கப் பார்வையினைக் கவனமாகப் பரிசீலித்து, படத்தில் காட்டப்பட்டுள்ள **X - Y** மற்றும் **P - Q** ஆகிய இரண்டு கோடுகளில் எந்தக் கோட்டிற்கேற்ப அது அமைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுக. (01 புள்ளி)




(viii) **B** என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அமைவிடத்திற்குக் குறுக்காக விரிவடைந்து செல்லும் நெடுங்கோட்டினைச் சரியாகக் குறிப்பிடுக. (01 புள்ளி)

Department of Examinations




SCALE 1:50000

**2017**

**1.** (அ) 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தினைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் 8) பயன்படுத்துக.

இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(i) இல. ① இனால் குறித்துக் காட்டப்படுவது என்ன?
(பவளக் கற்பார் / மணல் மேடு / அலைவேலி) (01 புள்ளி)

(ii) இல. ② இனால் குறித்துக் காட்டப்படுவது என்ன?
(ஆற்றுமுகம் / கழிமுகம் / கடனீரேரி) (01 புள்ளி)

(iii) இல. ③ இனால் குறித்துக் காட்டப்படும், இளஞ்சிவப்பு நிறத்தினால் நிழற்றப்பட்டுள்ள பகுதி என்ன?
(சுற்றுலா வலயம் / பாதுகாப்புப் பகுதி / அமைக்கப்பட்ட பகுதி) (01 புள்ளி)

(iv) இல. ④ இனால் குறித்துக்காட்டப்படுவது என்ன?
(சுற்றுலா விடுதி / ஹோட்டல் / வாடி வீடு) (01 புள்ளி)

(v) இப்பகுதியில் பரந்தளவில் பரம்பிக் காணப்படும் வர்த்தகப் பயிர் என்ன? (01 புள்ளி)

(vi) **A** தொடக்கம் **B** வரை விரிவடைந்து காணப்படும் நிர்வாக எல்லை என்ன? (01 புள்ளி)


(vii) **C - D** இனால் விமானப் பாதையொன்று குறித்துக் காட்டப்படுகின்றது. அதன் நீளத்தினைக் கிலோ மீற்றர்களில் குறிப்பிடுக. (01 புள்ளி)

(viii) **E** எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் கோடு என்ன? (01 புள்ளி)

(ix) **F, G, H** நாற்பக்கல்களில் உள்ள மூன்று பகுதிகளில் நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காகப் பெரும் எண்ணிக்கையிலான மக்களைக் கவர்ந்து வரும் பகுதி எது? (01 புள்ளி)

(x) மேலே **F, G** மற்றும் **H** ஆகிய மூன்று பகுதிகளுள், மிக உயர்ந்தளவிலான சமயப் பல்வகைமையைக் கொண்டிருக்கும் பகுதி எது? (01 புள்ளி)

Department of Examinations




SCALE 1 : 50 000

**2018**

1. (அ) உமக்குத் தரப்பட்டுள்ள 1:50 000 இடவிளக்கப் படத்தின் பகுதியைப் பரிசீலித்து அதன் அடிப்படையில், பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகள் எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் 8) பயன்படுத்துக.

இலக்கம் (i) தொடக்கம் (iii) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(i) இல. ① இனால் குறித்துக்காட்டப்படுவது என்ன?
(பாறை / கற்குழி / கூம்புக்குன்று) (01 புள்ளி)

(ii) இல. ② இனால் குறித்துக்காட்டப்படுவது என்ன?
(காடுகள் / பிற பெருந்தோட்டங்கள் /சரணாலயங்கள்) (01 புள்ளி)

(iii) இல. ③ இனால் குறித்துக்காட்டப்படுவது என்ன?
(ஒடுங்கிய புகையிரதப்பாதை / அகன்ற தனியான புகையிரதப்பாதை / அகன்ற இரட்டைப் புகையிரதப்பாதை ) (01 புள்ளி)

(iv) இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பிரதான வர்த்தகப் பயிர் என்ன? (01 புள்ளி)

(v) படப் பகுதியில் பிரதான நதி நெடுகிலும் விரிவடைந்து காணப்படும் நிர்வாக எல்லை என்ன? (01 புள்ளி)


(vi) நாற்பக்கல் **A** இல் குடியிருப்பொன்று காட்டப்பட்டுள்ளது. அதில் குறியீடுகளினால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் பொதுச் சேவைகளை வழங்கும் **இரண்டு** அரசாங்க நிறுவனங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(vii) நாற்பக்கல் **A** இல் உள்ள பகுதியினை ஒரு குடியிருப்பாக உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள பிரதான மானிடக் காரணி என்ன? (01 புள்ளி)

(viii) **X** இன் அமைவிடத்துக்குக் குறுக்காக விரிவடைந்து செல்லும் அகலக் கோட்டினைச் சரியாக பெயரிடுக. (01 புள்ளி)

(ix) படப் பகுதியில் நெற் பயிர்ச்செய்கையின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணி என்ன? (01 புள்ளி)

Department of Examinations Sri Lanka




SCALE : 1 : 50000

**2019**

1. (அ) உமக்குத் தரப்பட்டுள்ள 1:50 000 இடவிளக்கப் படத்தின் பகுதியைப் பரிசீலித்து அதன் அடிப்படையில், பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகள் எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் **8**) பயன்படுத்துக.

இலக்கம் (i) தொடக்கம் (iii) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(i) A-B கோட்டினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நிலவுருவம் என்ன
(குழிவுச்சாய்வு / குவிவுச்சாய்வு / ஓங்கல் சாய்வு)

(ii) C எழுத்தினால் குறித்துக்காட்டப்படுவது என்ன?
(பற்றைக்காடுகள் / புல்நிலங்கள் / காடுகள்)

(iii) D எழுத்தினால் குறித்துக்காட்டப்படுவது என்ன?
(ஒடுங்கிய புகையிரதப் பாதை / அகன்ற ஒற்றைப் புகையிரதப் பாதை / அகன்ற இரட்டைப் புகையிரதப் பாதை)

(iv) E எழுத்தினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள நாற்பக்கல் பகுதியில் பரவிக் காணப்படும் பிரதான வர்த்தகப் பயிர் என்ன?


(v) R எழுத்தினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள நாற்பக்கல் பகுதியில் காணப்படும் பொதுச்சேவைகளை வழங்கும் மூன்று நிறுவகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

படப்பகுதி பற்றிய இரண்டு கூற்றுக்கள் (vi), (vii) ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து அவை சரியாயின் ச எனவும், பிழையாயின் பி எனவும் விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.

(vi) படப் பகுதியினால் குறித்துக்காட்டப்படுவது இலங்கையின் பல்வேறு மாகாணங்களுக்குரிய பகுதியாகும் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

(vii) X சந்தி தொடக்கம் R சந்தி வரை விரிவடைந்து காணப்படும் பெருந்தெருப்பகுதியின் து‘ரம் 4 கிலோமீற்றர் ஆகும்.

(viii) படத்திற்குக் கீழே P,Q,R எனக் குறிப்பிட்டு வரையப்பட்டிருக்கும் நேர்கோட்டு அளவுத்திட்டங்களில் சரியாக வரையப்பட்டிருக்கும் அளவுத்திட்டக் கோட்டுக்குரிய எழுத்தை விடைத்தாளில் தரப்பட்டிருக்கும் உரிய இடைவெளியில் எழுதுக.




SCALE : 1 : 50 000

P → km 1 0 1 2 3 4 5

Q → km 0 1 2 3 4 5 6 km

R → km 1 0 1 2 3 4 5 km

**உலகப்புறவுருவப்படங்கள்**

**2016**


(i) A,B மற்றும் C என்ற எழுத்துக்களில் பவளப்பாறைகளைச் சேர்க்கையாகக் கொண்டுள்ள தடுப்புப் பாறைத் தொடர் எந்த எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது?

**(ii)** **D, E** மற்றும் **F** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று குடாநாடுகளில், 'கம்சட்கா' குடாநாட்டினைக் காட்டும் எழுத்து எது?

**(iii)** **G, H** மற்றும் **J** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று நாடுகளில், இரும்பு மற்றும் உருக்கு உற்பத்திக்கு முக்கியத்துவம் பெற்ற 'பிறேசிலைக்' காட்டும் எழுத்து எது?

**(iv)** **K, L** மற்றும் **M** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று நாடுகளில், ஆபிரிக்காவில் அதிகளவு குடித்தொகையைக் கொண்ட நாடான 'நைஜீரியாவைக்' காட்டும் எழுத்து எது?

(v) **P, Q** மற்றும் **R** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று பிரதேசங்களில் மிகக் குறைந்த குடித்தொகைப் பரம்பலைக் கொண்ட பிரதேசத்தினைக் காட்டும் எழுத்து எது? (05 புள்ளிகள்)




**2017**

உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினை கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு உலகப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலினைப் (பக்கம் 9) பயன்படுத்துக.


(i) **A, B** மற்றும் **C** ஆகிய மூன்று எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படும் மலைத் தொடர்களுள் பிரனீஸ் மலைத் தொடரைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

(ii) **D, E** மற்றும் **F** எழுத்துக்களினால் காட்டப்படும் மூன்று குடா நாடுகளில் மிக அண்மையில் சூறாவளியினால் அழிவுக்குட்பட்ட புளோரிடாக் குடாநாட்டினைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

(iii) **G, H** மற்றும் **J** ஆகிய மூன்று எழுத்துக்களில் விக்டோரியா ஏரியைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

(iv) **K, L** மற்றும் **M** எழுத்துக்களினால் காட்டப்படும் பகுதிகளில், வில்லி வில்லீஸ் என அறியப்படும் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட சமுத்திரப் பகுதியைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

(v) **P, Q** மற்றும் **R** எழுத்துக்களினால் காட்டப்படும் அமைவிடங்களில் டோக்கியோ கைத்தொழில் பிரதேசத்தின் அமைவிடத்தினைக் காட்டும் எழுத்து என்ன? (05 புள்ளிகள்)




(i) (ii) (iii) (iv) (v) 5

**2018**

உமக்கு தரப்பட்டுள்ள உலகப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு உலகப் படத்தின் அருகே அமைந்துள்ள நிரல் பெட்டிகளைப் (பக்கம் 9) பயன்படுத்துக.

(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துகள் தரப்பட்டுள்ளன. உலகப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவுசெய்து அதனை அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரேயுள்ள பெட்டியில் எழுதுக.

(i) **போல்ரிக் கடல் - A, B, C**

(ii) 2018 ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்ற இந்தோனேசியாவின் **சுமாத்திரா தீவு - D, E, F**


(iii) **அற்றக்காமா குளிர் பாலைவனம் - G, H, J**

(iv) உலகின் மிக ஆழமான ஏரி எனக் கருதப்படும் **பைக்கால் ஏரி - K, L, M**

(v) காரீய உற்பத்திக்கு முக்கியத்துவம் பெற்ற ஆபிரிக்க நாடான **தன்சானியா - P, Q, R**

(05 புள்ளிகள்)

(ஆ) /(ஆ) /(b)




(i) (ii) (iii) (iv) (v) 5

**2019**

(i) நைகர் ஆறு – A,B,C

(ii) அண்மையில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் இழிவின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள அமேசன் காடு – D,E,F

(iii) ஹொங்கொங் - G,H,I

(iv) பனி மலைகள் உருகும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள கிறீன்லாந்து – K.L.M

(v) தாமோதார் இரும்புருக்குக் கைத்தொழில் பிரதேசம் - P,Q,R



## இலங்கைப்புறஉருவப்படங்கள்

### 2016

உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலினைப் (பக்கம் 9) பயன்படுத்துக.


(i) **A, B** மற்றும் **C** என்ற எழுத்துக்களில், அண்மையில் அதிகளவில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட 'பொலன்னறுவை' மாவட்டத்தினைக் காட்டும் எழுத்து எது?

(ii) **D, E** மற்றும் **F** என்ற எழுத்துக்களில், இல்மனைற்று படிவு அமைந்துள்ள 'புல்மோட்டையைக்' காட்டும் எழுத்து எது?

(iii) **G, H** மற்றும் **J** என்ற எழுத்துக்களில், சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபல்யமான 'நிலாவெளி' கடற்கரையைக் காட்டும் எழுத்து எது?

(iv) **K, L** மற்றும் **M** என்ற எழுத்துக்களில், 'நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின்' அமைவிடத்தினைக் காட்டும் எழுத்து எது?

(v) **P, Q** மற்றும் **R** என்ற எழுத்துக்களில், 'வெலிகம மீன்பிடித் துறைமுகத்தின்' அமைவிடத்தினைக் காட்டும் எழுத்து எது? (05 புள்ளிகள்)




(i)

(ii)

(iii)

(iv)

(v)

5

**2017**

உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் (பக்கம் **9**) பயன்படுத்துக.

(i) **A, B** மற்றும் **C** எழுத்துக்களால் காட்டப்படும் மூன்று மாவட்டங்களில், மிகக் குறைவான சனத்தொகை அடர்த்தியைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தினைக் குறித்துக் காட்டும் எழுத்து என்ன?


(ii) **D, E** மற்றும் **F** ஆகிய மூன்று எழுத்துக்களில், சிலிக்கா மணல் படிவு பரம்பிக் காணப்படும் மாதம்பேயின் அமைவிடத்தினைக் குறித்துக் காட்டும் எழுத்து என்ன?

(iii) **G, H** மற்றும் **J** என்னும் மூன்று எழுத்துக்களில், புந்தல கடனீரேரியின் அமைவிடத்தினைக் குறித்துக் காட்டும் எழுத்து என்ன?

(iv) **K, L** மற்றும் **M** என்னும் மூன்று எழுத்துக்களில், மகாவலியின் மூன்று கிளையாறுகளைக் காட்டும் எழுத்துக்களில் உமா ஓயாவைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

(v) **P, Q** மற்றும் **R** என்னும் எழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள மூன்று அமைவிடங்களுள், தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் அமைவிடத்தினைக் குறித்துக் காட்டும் எழுத்து எது? (05 புள்ளிகள்)

)




(i)

(ii)

(iii)

(iv)

(v)

5

உமக்கு தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாய் பரிசீலித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் படத்திற்கு அருகிலுள்ள (பக்கம் 9) நிரலைப் பயன்படுத்துக.

(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துகள் தரப்பட்டுள்ளன. படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரேயுள்ள பெட்டியில் எழுதுக.


(i) வெப்ப மின்சக்தி நிலையம் அமைந்துள்ள **கெரவலப்பிட்டிய** - **A, B, C**

(ii) **வவுனியா மாவட்டம்** - **D, E, F**

(iii) இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் அமைந்துள்ள **அகலவத்தை** - **G, H, J**

(iv) வெண்களி அமைந்துள்ள **மீட்டியாகொட** - **K, L, M**

(v) சுற்றுலாக் கவர்ச்சியைக் கொண்டிருக்கும் **பாசிக்குடா கடற்கரை** - **P, Q, R** (05 புள்ளிகள்)




(i) ☐

(ii) ☐

(iii) ☐

(iv) ☐

(v) ☐

☐ 5

**2019**


(i) கழிவுகள் நிரப்பப்படும் அறுவாக்காலு – A,B,C

(ii) பதுளை மாவட்டம் - D,E,F

(iii) காங்கேசன்துறை மீன்பிடித் துறைமுகம் - G,H,I

(iv) அலைச்சறுக்கு விளையாட்டுக்குப் புகழ்பெற்ற இடமான அறுகம்குடா – K,L,M

(v) சுற்றுலாக் கவர்ச்சியைக் கொண்ட மாதுகங்கை – P.Q,R



## பகுதி II

**தரம் 10**

**2016**


01 (i) வளிமண்டலச் சேர்க்கையின்படி அதில் அதிகளவில் காணப்படும் இரண்டு வாயுக்களைப் பெயரிடுக.

(ii ) வளிமண்டலத்தின் ஏனைய படைகளிடையே மாறன் மண்டலம் மனிதனுக்கு ஏன் மிக முக்கியமானது என்பதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

(iii) (a) புவியில் நீர் எவ்வாறு பரம்பியுள்ளதென்பதைக் காட்டும் மூன்று வடிவங்களைக் குறிப்பிடுக.

(b) தற்போது நீரின் தரத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சிக்குக் காரணமான இரண்டு மானிட நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

02




(i) மேலே உள்ள உலகப் படத்தில் மறையே D மற்றும் E என்பவற்றினால் காட்டப்பட்டுள்ள வர்த்தக மட்டத்தில் நெல் பயிரிடப்படும் இரண்டு நாடுகளைப் பெயரிடுக.


(ii) (a) இத்தாலியில் நெற் பயிர்ச்செய்கைகுப் புகழ்பெற்ற ஆற்றுப் பள்ளத்தாக்கினைப் பெயரிடுக.

(b) உலகின் நெற் பயிர்ச்செய்கையில் இனங்காணக்கூடிய அண்மைக்காலப் போக்குகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii)

(a) அருகிலுள்ள படத்தில் இலங்கையில் நெல் பயிரிடப்படும் பிரதான பகுதிகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் முறையே 1 மற்றும் இல 2 என்பவற்றினால் காட்டப்படும் பிரதெசங்கள் ஒழுங்குமுறையில் பெயரிடுக.

(b) உம்மால் பெயரிடப்பட்ட இரண்டு பிரதெசங்களில் ஒரு பிரதேசத்தினது நெற் பயிர்ச்செய்கையில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் பற்றிச் சுருக்கமான விவரணமொன்றைத் தருக.




03 (i) இலத்திரனியல் கைத்தொழிலில் மன்னணியிலுள்ள இரண்டு ஆசிய நாடுகளைப் பெயரிடுக.

(ii) ஏனைய பரும்படியாக்கக் கைத்தொழில்களுடன் ஒப்பிடும் போது இலத்திரனியல் கைத்தொழிலில் இனங்காணக்கூடிய மூன்று விசேடமான பண்புகளைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையின் இலத்திரனியற் கைத்தொழில் தொடர்பாக பின்வரும் தலைப்புக்களின் கீழ் விவரிக்குக.

a. கைத்தொழில் பரம்பிக் காணப்படும் பகுதிகள்
b. கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் இரண்டு பிரச்சினைகள்
c. கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் இரண்டு போக்குகள்

## 2017

04 (i) புவியின் அமைப்பின்படி கற்கோளத்தின் இரண்டு பிரதான பகுதிகளைப் பெயரிடுக.

(ii) (a) அமைப்பின்படி புவிப்படைகளில் மூடியையும், மையப்பகுதியையும் வேறுபடுத்தும் எல்லையினை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் பெயர் என்ன?

(b) புவி மூடிப் பகுதியின் விசேடமான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.


(iii) (a) உயிர்க்கேளாத்தின் தொழிற்பாட்டினைப் பாதிக்கின்ற இரண்டு பிரதான காரணிகளைப் பெயரிடுக.

(b) உயிர்க்கோளத்தின் சமநிலையில் ஏற்படும் சீர்குலைவுக்குக் காரணமான இரண்டு மானிட நடவடிக்கைகளைப் பெயரிட்டு அவற்றில் ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விவரிக்குக.

05 உலகின் பிரதான காலநிலை வலயங்கள் அருகிலுள்ள வரைபடத்தில் காட்டப்படுகின்றது. அதனை நன்கு பரசீலித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) வரைபடத்தில் யு மற்றும் டீ எழுத்துக்கள் ஒவ்வொன்றினாலும் காட்டப்படும் காலநிலை வலயங்கள் இரண்டினை முறையே எழுதுக.

(ii) உம்மால் மேலே (i) இல் பெயரிடப்பட்டுள்ள காலநிலை வலயங்களுள் ஒன்றினது விசேடமான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.



(iii) உலகின் மானிட நடவடிக்கைகளைக் காலநிலை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை மூன்று உதாரணங்களுடன் விவரிக்குக.

06 (i) (a) உலகில் பிரதானமாக தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் பெற்ற ஆசிய நாடு(இலங்கை தவிர்ந்த) ஒன்றினையும்


(B) ஆபிரிக்க நாடு ஒன்றினையும்

முறையே பெயரிடுக.

(ii) உலகின் பிரதான விவசாய நிலப்பயன்பாட்டு முறையாகக் காணப்படும் பெருந்தோட்ட விவசாயத்தின் விசேட அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையில் தேயிலையின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்று நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைப்பற்றிச் சுருக்கமாக விவரிப்பினைத் தருக.

07 (i) அருகிலுள்ள இலங்கைப்படத்தில் முறையே A மற்றும் B எழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் இரண்டினை முறையே குறிப்பிடுக.





(ii) இலங்கையின் கடல்சார் மீன்பிடிக் கைத்தொழிலுடன் தொடர்புபட்டுக் காணப்படும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(iii) (a) குளங்களிலும் நீர்த்தேக்கங்களிலும் தற்பொழுது பரந்தளவில் வளர்க்கப்பட்டு வரும் நன்னீர் மீன் இனங்கள் இரண்டினை பெயரிடுக.

(b) இலங்கையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை விருத்தி செய்ய வேண்டிய முக்கியத்துவத்திற்கான இரண்டு காரணிகளை விவரிக்குக.

## 2018

08 (i) புவியின் வளிமண்டலத்தின் அமைப்பிற்கேற்ப அதிலடங்கியுள்ள பிரதான வாயுக்களின் சதவீதப் பெறுமானங்கள் அரகிலுள்ள வரிப்படத்தில் A,B,C,D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ளன. A,B ஆகியவற்றால் காட்டப்படும் பிரதான வாயுக்கள் இரண்டினையும் முறையே பெயரிடுக.




(ii) மாறன் மண்டலத்தின் மூன்று பிரதான பண்புகளைக் குறிப்பிடுக.

(iii) தற்காலத்தில் வளிமண்டலத்தின் மாசுபடுத்தலுக்குக் காரணமான மூன்று மானிட நடவடிக்கைகளையும் பெயரிட்டு அவற்றில் ஒன்றினால் ஏற்படும் விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக.

09 (i) விவசாய நிலப்பயன்பாட்டு முறைகளின் கீழ்

(a) உலகில் பெருமளவில் பயிரிடப்படும் வர்த்தக தானியப் பயிர்
(b) ஆசிய நாடுகளில் தொழிற் செறிவுமிக்க பயிர்ச்செய்கையாக மேற்கொள்ளப்படும் பிரதான தானியர் பயிர்

ஆகியவற்றை முறையே பெயரிடுக.

(ii) உலகின் வர்த்தக ரீதியான பாற்பண்ணைத் தொழிலுடன் இணைந்து காணப்படும் விசேட அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) (a) இலங்கையில் நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடமமொன்றினைப் பெயரிடுக.

(b) இலங்கையின் ஈரவலயத்தில் மேற்கொள்ளப்படும் நெற் பயிர்ச்செய்கையின் விசேட அம்சங்கள் இரண்டினை விவரிக்குக.

10 (i) உற்பத்திக் கைத்தொழில்களின் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு காரணிகளைப் பெயரிடுக.

(ii) உலகின் உற்பத்திக் கைத்தொழில்களுடன் இணைந்து காணப்படும் மூன்று சூழலியல் பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(iii) (a) இலங்கையில் பெட்ரோல் - இரசாயனக் கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் இரண்டு உற்பத்திகளைப் பெயரிடுக.

(b) பெட்ரோல் - இரசாயனக் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதனால் ஏற்படும் இரண்டு நன்மைகளையும் ஒரு தீமையையும் சுருக்கமாக விளக்குக?

11 (i) இலங்கையில் பயிரிடப்படும் மரபுரீதியான சிறு ஏற்றமதிப் பயிர்களில் வாசனைத்தரவியப் பிரிவைச்சேர்ந்த இரண்டு பயிர்களைப் பெயரிடக.

(ii) இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதற்கு ஏதுவான மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) (a) இலங்கையில் மரபுநீதியற்ற சிறு ஏற்றுமதிப் பயிர்கள் இரண்டினைப் பெயரிடுக.

(b) சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு, இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்று நடவடிக்கைகளை விவரிக்குக.

**2019**

12 (i) புவியின் வளிமண்டலத்தில் காணப்படும் படைகளில்

(a) எல்லா வளிமண்டலவியல் தோற்றப்பாடுகளும் இடம்பெறும் படையினைப் பெயரிடுக.

(b) மிக உயர்வான வெப்பநிலையைக் கொண்ட படையினைப் பெயரிடுக.

(ii) மனிதனின் பயன்பாட்டுக்கொன எஞ்சியிருக்கும் நன்னீரின் தரத்தில் ஏற்படும் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

(iii) உயிர்க்கோள ஏா தொகுதியின் இருப்பினைக் காடுகளின் அழிவு எவ்வாறு பாதிக்கின்றது என்பதை மூன்று காரணிகளுடன் விளக்குக.

13 (i) அருகிலுள்ள இலங்கைப் படத்தில் 1,2 ஆகிய இலக்கங்களினால் குறிபப்பிடப்படும் இறப்பர் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் பெற்ற இரண்:டு மாவட்டங்களையும் மூறையே பெயரிடுக.




(ii) இலங்கையில் தற்பொழுது இறப்பர் கைத்தொழில் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(III) இறப்பரை மூலப்பொருளாக ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக உள்ளூர் கைதத்தொழில்களுக்குப் பயன்படுத்துதல் மூடிவுப் பொருட்களாக ஏற்றுமதி செய்தல் என்பன இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குக் காரணமாய அமையும் விதத்தை மூன்று காரணிகளுடன் விளக்குக.

14 கடந்த காலத்தில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் விருத்திபெற்ற கைத்தொழிலாகக் காணப்பட்ட கப்பல் கட்டும் கைத்தொழில் இன்று உலகின் முன்னணி தயாரிப்புக் கைத்தொழிலாக உருமாற்றம் பெற்றுள்ளது.

(i) கடந்த காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் கப்பல் கட்டும் கைத்தொழிலின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணங்களை எழுதுக.

(ii) கப்பல் கட்டும் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) (a) அண்மைக்காலங்களில் இலங்கையில் படகுகளைத் தயாரிக்கும் கைத்தொழில் விருத்தியடைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. அதற்கான இரண்டு காரணங்களை விளக்குக.


(b) உலகின் தயாரிப்புக் கைத்தொழிலில்

(i) மூலப்பொருட்களுடன் தொடர்புடைய பிரச்சினை ஒன்றையும்

(ii) சந்தையுடன் தொடர்புடைய பிரச்சினை ஒன்றையும்
சுருக்கமாக விவரிக்குக.

**தரம் 11**

**2016**




01 (i) மேலே உள்ள உலகப்படத்தில்

(a) A என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள காட்டு வகையையும்

(b) B என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள காட்டு வகையையும்

ஒழுங்குமுறையில் பெயரிடுக.

(ii) மனித இனத்துக்கு காடுகள் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

III) தற்பொழுது காடுகளினாலும் வன ஜீவராசிகளினாலும் எதிர்கொள்ளப்படும் மூன்று பிரச்சினைகளை விவரிக்குக.

02 (i) உலகின் குடித்தொகைப் பரம்பலினைப் பாதிக்கின்ற

(a) பௌதிகக் காரணி ஒன்றினையும்

(b) மானிடக்காரணி ஒன்றினையும்

பெயரிடுக.

(ii) உலகின் பிரதான குடித்தொகைச் செறிவு கொண்ட பிரதேசங்களில் காணக்கூடிய மூன்று விசேடமான பண்புகளைக் குறிப்பிடுக.

(iii) (a) கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் காணப்படும் குடித்தொகைச் செறிவுக்குப் பொறுப்பான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.

(b) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மாவட்டங்களிலும் குடித்தொகைச் செறிவின் காரணமாக ஏற்பட்டுள்ள இரண்டு பிரச்சினைகளை விவரிக்குக.

03 (i) மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு தகுதி விதிகளைப் பெயரிடுக.

(ii) இலங்கையில் சுகாதாரத் துறையை விருத்தி செய்வதற்கு கடந்த இரண்டு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் மூன்று படிமுறைகைள விவரிக்குக.

(iii) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தினை இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை மூன்று காரணிகளின் உதவியுடன் விளக்குக;

04 (i) பூகோள வெப்பநிலையில் அதிகரிப்பைத் தூண்டுகின்ற

(ய) மானிட நடவடிக்கை ஒன்றினையும்

(டி) இயற்கைக் காரணி ஒன்றினையும்

குறிப்பிடுக.

(ii) மானிட நடவடிக்கைகளின் மீது காலிநலை மாற்றம் ஏற்படுத்தும் பாதகமான தாக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) காலநிலை மாற்றத்தினை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்று நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

**2017**

05 (i) உலகில் காரீய உற்பத்திக்குப் புகழ்பெற்ற நாடுகள் (இலங்கை தவிர்ந்த) இரண்டைப் பெயரிடுக.


(ii) காரீயத்துடன் இணைந்து காணப்படும் மூன்று உற்பத்திகளைப் பெயரிடுக.

(iii) (a) இலங்கையின் காரீயக் கைத்தொழிலில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள சுரங்கெ

மான்றினதும், கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள சுரங்கமொன்றினதும் பெயரை முறையே எழுதுக.

(b) இலங்கையின் கனிய வளங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்று நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

- 6 தொடக்கம் 7 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள உலகப் படத்தினைப் பயன்படுத்துக.




06 (i) கடந்த காலத்திலிருந்து இன்றுவரை உலகின் சனத்தொகை வளர்ச்சியில் காணப்படும் பாங்குகளின்படி பிரித்தறியக்கூடிய இரண்டு நிலைகளை இனங்காண முடியும். இவ் இரண்டு நிலைகள் ஒவ்வொன்றினையும் குறிப்பிடுக.

(ii) மேற்குறித்த உலகப்படத்தில் A,B மற்றும் C இனால் குறித்துக் காட்டப்படும் சனத்தொகைச் செறிவுள்ள வலயங்கள் மூன்று அமைவு பெற்றுள்ள முக்கியமான நாடுகள் மூன்றை முறையே பெயரிடுக.

(iii) இலங்கையின் சனத்தொகை கட்டமைப்பில் இனங்காணக்கூடிய மூன்று விசேடமான அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைப் பற்றிச் சுருக்கமான விவரணம் தருக.

07 (i) பின்வரும் ஒவ்வொன்றுக்கும் உவ்வொரு உதாரணம் தருக.

(a) உயிரியல் இடர்

(b) காலநிலை இடர்

(ii) உலகில் புவிநடுக்கங்கள் அடிக்கடி நிகழும் மூன்று வலயங்கள் மேலேயுள்ள உலகப்படத்தில் D,E மற்றும் F என்னும் எழுத்துக்களால் குறித்துக் காட்டப்படுகின்றன. இம்மூன்று வலயங்கள் ஒவ்வொன்றினையும் முறையே குறிப்பிடுக.

(iii) இலங்கையில் பரந்தளவில் இடம்பெற்றுவரும் இயற்கை இடர்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் விளைவினால் ஏற்படும் அனர்த்தங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

**2018**

08 இலங்கையில் இயற்கை வளங்களுள் ஒன்றான நிலம் அதிக முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதோடு தீவுகளைக் கொண்டமைந்துள்ள நிலப்பகுதியானது 65610சதுரக் கிலோமீற்றராகக காணப்படுகின்றது.

(i) இலங்கைக்குச் சொந்தமான தீவுகள் இரண்டைப் பெயரிடுக.

(ii) இலங்கையில் நிலப்பயன்பாட்டுடன் இணைந்து காணப்படும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக?

(iii) இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் நிலப்பாதுகாப்பு நுட்பமுறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விவரிக்குக.

09 (i) (a) உலக குடித்தொகையின் ஏறக்குறைய 60வீதமானவர்கள் பரம்பிக் காணப்படும் கண்டம்

(b) உலக குடித்தொகையில் ஏறக்குறைய 10 வீதமானவர்கள் பரம்பிக் காணப்படும் கண்டம் ஆகியவற்றை முறையே பெயரிடுக.

(ii) உலகில் குடித்தொகைச்செறிவு கொண்ட வலயங்களில் காணக்கூடிய விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) (a) உலக குடித்தொகையின் சமனற்ற பரம்பலைத் தீர்மானிக்கும் பௌதீகக் காரணி உன்றினையும் மானிடக் காரணி ஒன்றினையும் பெயரிடுக.

(b) இலங்கையின் குடித்தொகைப் பரம்பலில் பௌதீகக் காரணிகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை இரண்டு உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.

10 அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஐந்து சுட்டெண்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- மொத்த உள்நாட்டு உற்பத்தி
- மொத்த மெய் தேசிய உற்பத்தி
- மானிட அபிவிருத்திச் சுட்டெண்
- மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம்
- மானிட வறுமைச் சுட்டெண்

(I) மேற்கூறப்பட்ட சுட்டெண்களுள் நவீன பிரிசைவ்சேர்ந்த இரண்டு அபிவிருத்தி அளவீடுகளைப் பெயரிடுக.

(ii) நாடொன்றின் அபிவிருத்திச்செயன்முறையைத் துரிதப்படுத்துவதற்கு மனித வளங்களை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமானது. இலங்கையில் மனிதவள அபிவிருத்தியின் போது விசேட கவனம் செலுத்த வேண்டிய மூன்று துறைகளைப் பெயரிடுக.

(iii) மேலே (ii) இல் எம்மால் குறிப்பிடப்பட்ட மூன்று துறைகளுள் ஏதாவது ஒரு துறையின் அபிவிருத்தி தொடர்பாக அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இரண்டு நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

**2019**

11 (i) இலங்கையில் நீர் தவிர்ந்த மின்சாரப் பிறப்பாக்கத்துக்காகப் பரந்தளவில் பயன்படுத்தப்படும் இரண்டு சக்தி வளங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) சக்திப் பயன்பாட்டில் ஏற்படும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக?

(iii) சக்தியை மிகச் சிக்கனமாய் பயன்படுத்துவதனால் ஏற்படும் மூன்று நன்மைகளை விவரிக்குக.

12 (i) (a) ஆபிரிக்காவில் மோசமான காலநிலைக் காரணிகளின் தாக்கங்கள் காரணமாக குறைவான சனத்தொகைப் பரம்பலைக் கொண்டுள்ள பகுதி ஒன்றின் பெயரையும்.

(b) கரடுமுரடான தரையமைப்புத் தாக்கங்களின் காரணமாக ஆசியாக் கண்டத்தில் குறைவான சனத்தொகைப் பரம்பலைக் கொண்டுள்ள பகுதி ஒன்றின் பெயரையும் முறையே குறிப்பிடுக.

(ii) (a) விரைவான சனத்தொகை வளர்ச்சி வீதத்தின் காரணமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் இரண்டு பிரச்சினைகளையும்

(b) பெருமளவு மெதுவான குடித்தொகை வளர்ச்சி வீதத்தின் காரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினை ஒன்றையும் குறிப்பிடுக.

(iii) இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பு காரணமாகத் தோற்றம்பெற்றுள்ள மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விவரிக்குக.

13 (i) இலங்கையில் பிரதெச அபிவிருத்தியினூடாக அடைந்தகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் அடிப்படை நோக்கத்தினைக் குறிப்பிடுக.

(ii) இலங்கையில் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு நடைமுறைப்படுத்தப்படும் மூன்று செயற்றிட்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையில் பெருந்தெருக்கள் மற்றும் புகையிரதப் பாதைகளை அபிவிருத்தி செய்வதற்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மூன்று நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அவை நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்துள்ள விதம் பற்றி விவரிக்குக.

14 (i) மனித நடவடிக்கைகளின் செல்வாக்கு இன்றி ஏற்படும் இயற்கை இடர்கள் இரண்டினைப் பெயரிடுக.

(ii) கீழே A,B,C ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள மாவட்டங்கள் ஒவ்வொன்றினையும் கடுமையாகப் பாதிக்கும் இயற்கை இடரின் பெயரைக் குறிப்பிடுக.

A களுத்துறை, இரத்தினபுரி

B அனராதபுரம், மன்னார்

C கேகாலை, நுவரெலியா

(iii) (a) அருகில் காட்டப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ வட்டத்தின் வரைபடத்திலுள்ள A,C ஆகிய இரண்டு நிலைகளும் யாவை என முறையே எழுதுக.

(b) வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள B நிலையின் போது ஒருவர் மேற்கொள்ள வேண்டிய இரண்டு நடவடிக்கைகளை விளக்குக

